பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 29

# இந்தியா, இலங்கையின் முக்கிய சுற்றுலாத் தளமாகும்

## இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா



நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடனான சந்திப்பின் ஆரம்பத்தில் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா இந்திய பிரதமர் நரேந்திர மோதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் ஆகியோரது வாழ்த்துச் செய்திகளை பிரதமருக்கு முன்வைத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவை பலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் தற்போது செயற்பாட்டிலுள்ள திட்டங்கள் மற்றும் சுற்றுலாத்துறை, பௌத்த உறவினை மேம்படுத்தல் உள்ளிட்ட பரஸ்பர ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும் பல்வேறு துறைகள் தொடர்பில் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. (03)

# திடீரென முடங்கிய பேஸ்புக், வட்ஸ் அப், இன்ஸ்டாகிராம்




உலகம் முழுவதும் பல நாடுகளில் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வட்ஸ் அப் சமூக வலைத்தளங்கள் முடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் பல கோடிக்கணக்கான மக்கள் உபயோகப்படுத்தும் செயலியாக வட்ஸ் அப் உள்ளது. செய்திகளை அனுப்புதல், வீடியோ, புகைப்படங்களை பகிர்தல், காணொளி அழைப்பு போன்ற பல்வேறு வசதிகளை வட்ஸ் அப் வழங்கி வருகிறது. ஃபேஸ்புக் நிறுவனம் தான் இந்த செயலியையும் நடத்தி வருகிறது. (03)

## பொதுமக்கள் சுகாதாரத் துறைக்கு உதவினால் இந்த வருடத்தில் ஏற்படும் தாக்கத்தை கடந்த வருடத்தைப் போன்று கட்டுப்படுத்துவோம் - வைத்தியர் ஜி. சுகுணன்



கடந்த வருடம் பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை பகுதிகளில் பாதிப்பு அதிகமாகத்தான் இருந்தது. டெங்கு நோயை உருவாக்கும் ஏடீஸ் நுளம்புகளை பொறுத்தவரையில் சிறிய நீர் தேங்கி இருக்கும் இடங்களில் பெருக்கம் அடைகின்றன. (03)

# மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்திற்கு 3 கோடி நிதி

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்ட மக்களின் வாழ்வியலை வலுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள நன்னீர் நிலைகள் தெரிவு செய்யப்பட்டு மீன் மற்றும் இறால் குஞ்சுகளை இடுகின்ற வேலைத்திட்டம் நக்டா எனப்படும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய 3 கோடி 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 இலட்சத்து 65 ஆயிரம் இறால் குஞ்சுகளும் சுமார் 2,281,314 மீன் குஞ்சுகளும் சுமார் 25 தெரிவு செய்யப்பட்ட நீர்நிலைகளில் இடப்பட்டுள்ளன. (03)

# ஓமான் நோக்கி பயணமான இலங்கை கிரிக்கெட் அணி




இலங்கை கிரிக்கெட் அணி ஓமான் நோக்கி பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஓமான் அணியுடன் இடம்பெற்றவுள்ள போட்டித் தொடரில் கலந்து கொள்வதற்காக இவ்வாறு இலங்கை அணி ஓமான் நோக்கி பயணித்துள்ளது.

ஓமான் தொடரை தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்தல் இடம்பெறவுள்ள உலக கிண்ண ரி20 போட்டித் தொடரில் இலங்கை அணி கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரணச்சான்றிதழ் கொடுக்கலாம் - கையளிக்கப்பட்டவர்கள் எங்கே?

## பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா கேள்வி



காணாமல் போனவர்களுக்கு நீங்கள் மரணச் சான்றிதழ் கொடுக்கலாம். ஆனால், உங்களிடம் கையளிக்கப்பட்டவர்கள் எங்கே? உங்களிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கும் நீங்கள் மரணச் சான்றிதழ் கொடுக்கப் போகின்றீர்கள் என்றால் நீங்கள் அவர்களைக் கொன்றுவிட்டீர்கள். நீங்கள் கொலைக் குற்றவாளிகள். நீங்கள் தண்டனை பெற வேண்டியவர்கள் என்பதை நீங்களே ஏற்றுக் கொள்கின்றீர்கள். (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா?

நீண்டகாலமாக அரசுகளால் நடத்தப்படாமல் இழுபறியில் இருக்கும் மாகாண சபைகளுக்கானத் தேர்தல் வெகு விரைவில் நடத்தப்படுவதற்கான எவ்வித வாய்ப்புக்களும் தெரிவதாக இல்லை. ஆனால் ஆளுந்தரப்பில் உள்ள ஒருசிலரால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. எதிர்க்கட்சியினர். நாட்டின் ஜனநாயகவாதிகள் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

நாட்டின் தேர்தல்கள் ஆணைக் குழுவும்இவ்விடயம்தொடர்பில்மௌனமாக இருக்கிறது. கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உலக நாடுகளில் தேர்தல் நடத்தப்பட்டது. சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள் வாக்களித்தனர். இலங்கையிலும் அவ்வாறு ஒரு தேர்தல் நடைபெற்றது. இருப்பினும் இந்த மாகாண சபைத் தேர்தலை நல்லாட்சியின் தொடர்ச்சியாக கோட்டபாய ராஜபக்சவின் ஆட்சியும் இழுத்தடிப்புச் செய்கிறது. இதுகுறித்து ஜனாதிபதி வாய்கூடத் திறக்கவில்லை.

தற்போது நாட்டின் அரச தரப்பினர் மீது மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. அரசின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விசனமடைந்துள்ளனர். பௌத்த தேரர்கள் அரசிற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். தெற்கில் அரச தரப்பு சரிவை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இதுவே எதிரணியனருக்கு சாதகமான சூழலை உருவாக்கியும் வருகிறது எனலாம்.

ரணில் விக்ரமசிங்கவின் பாராளுமன்ற மீள் பிரவேசத்தினை நாம் சாதாரண விடயமாக எடுத்துவிடக்கூடாது. அவரது பாராளுமன்ற முதலாவது உரையே வாயடைக்க வைத்தது என்பது அரச தரப்பினருக்கு நினைவில் இருக்கும். பல தவறுகளைச் செய்த அரசாங்கம் இன்று தேர்தலுக்கு முகங்கொடுக்க அச்சமடைந்துள்ளது என்பது தான் உண்மை என எதிரணியினர் பேச ஆரம்பித்துள்ளனர். திடீர் விலையேற்றங்களால் மக்கள் வெறுப்படைந்து நாட்டைவிட்டு தப்பியோடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இழுபறிகளுக்கு மத்தியில் திடீரென அரசு மாகாண சபைத் தேர்தலை அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எது எவ்வாறாயினும் தமிழ்த் தரப்பினர் இத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாரா?. வழமை போல கூட்டணி அமைக்கின்றோம் என போலியான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிடாமல். உண்மையில் தமிழ் மக்களது விடிவுக்காக தமிழனாக வடகிழக்கில் இருக்கக்கூடிய அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும் என்பதுவே தமிழ் மக்கள் சார்பில் நாம் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் காணப்படும் திருத்தப்படவேண்டிய உறுப்புரைகளைத் திருத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தெரிவிப்பு

## மிரிஹான பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்று (04) முற்பகல் சந்திப்பு







வரலாற்றில் எந்தவொரு காலத்திலும். சர்வாதிகாரம் அல்லது ஏகாதிபத்திய அரசாங்கமொன்று உருவாகாத பழமைவாய்ந்த வலய நாடாகவும் ஜனநாயக நாடாகவும் விளங்குகின்ற இலங்கைக்குள். ஜனநாயக விதிமுறைகளுக்கமைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ மரபுகளுடன் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட இலங்கையின் இணக்கம். இலங்கையுடன் இணைந்துப் பணியாற்றுதல் மற்றும் இலங்கை தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றம் கொண்டிருக்கும் எண்ணப்பாடு போன்ற விடயங்களை. இந்த விஜயத்தின் போது. மேற்படி பிரதிநிதிகள் ஆராய எதிர்பார்த்திருக்கின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்திய ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள். காலத்தை முன்னிலைப்படுத்திய தீர்வொன்றின் தேவை தொடர்பில் வலியுறுத்தினர். இந்த விஜயத்தின் போது தாம் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு. ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு அறிக்கை ஒன்றைத் தயாரித்து வழங்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தேவையான குழுக்களை நியமித்து. அவற்றின் அறிக்கைகளுக்கமைய. நீதி அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் காணப்படும் திருத்தப்படவேண்டிய உறுப்புரைகளைத் திருத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். அதேவேளை. தற்போதைய உலகின் மனித உரிமைகள் தொடர்பில் காணப்படும் இணக்கப்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும். ஜனாதிபதி தெரிவித்தார்.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் அதனால் அரசாங்கத்தின் திட்டமிடல்களை மேற் கொள்வதில் ஏற்பட்ட தடைகள் பற்றியும். ஜனாதிபதி எடுத்துரைத்தார். இருப்பினும். நாட்டில் நிலவிய நீண்டகால யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கவும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியைப் போன்றே. ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பிலும். ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

விசேடமாக. காணாமற்போனோரது குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கவும் காணாமற்போனோருக்கு நட்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார். நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கும். தமிழ் அரசியல் கட்சிகள். புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்துப் பணியாற்றுவதன் தேவை தொடர்பில். ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் உரையாற்றும் போது தான் தெளிவுபடுத்தியதாகவும். ஜனாதிபதி எடுத்துரைத்தார். சிவில் அமைப்புகளுடன் பரஸ்பர புரிதலுடன் பணியாற்றுவதோடு. நாட்டின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு அவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி அவர்கள் எடுத்துரைத்தார்.

கடந்த இரண்டு வருடக் காலப்பகு தியில் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்களுக்கு. ஒருபோதும் தடியடிப் பிரயோகமோ தண்ணீர்த் தாரைப் பிரயோகமோ அல்லது கண்ணீர்ப்புகைத் தாக்குதலோ நடத்தவேண்டாமென்று தான் ஆலோசனை வழங்கியிருந்ததாகவும் போராட்டக்காரர்களுக்கென்றே. ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்னால் தனியிடம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்றும். இந்த அரசாங்கம். ஜனநாயக ரீதியில் செயற்பட்டாலும். அவை தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதில்லை. ஒரு சிறிய சம்பவத்தின் அடிப்படையில் பல்வேறு தரப்பினர் தவறான கருத்துக்களை உருவாக்குவது துரதிஷ்டவசமானது. அரச மற்றும் தனியார்த் துறையினருடன் இணைந்துப் பணியாற்றவும் தனியார் துறையை மேம்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கச் செய்யவும். அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப உத்திகளை. தரமான பொதுச் சேவைக்காகப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும். ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இந்நாட்டின் முக்கிய வாழ்வாதாரமாகக் காணப்படும் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கான தொழில்நுட்ப மற்றும் பயிற்சி உதவிகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்குள்ள வாய்ப்புகள் தொடர்பிலும். ஜனாதிபதியால் தெளிவுபடுத்தப்பட்டது.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான அரசாங்கத்தின் திட்டமிடல்கள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதிக்கு. ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள். தங்களுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டனர்.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் சிரேஷ்ட ஆலோசகர். வர்த்தகம் மற்றும் நிலையான அபிவிருத்தி. ஜீஎஸ்பி மற்றும் Environment Action Programme இன் வர்த்தக நடவடிக்கைகள் பணிப்பாளர் நாயகம் நிக்கொலொஸ் ஸையிமிஸ் (Nikolaos Zaimis). ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளிப்புற நடவடிக்கைகள் மற்றும் சேவைகளுக்கான தெற்காசியப் பிரிவின் தலைவர் அயோனிஸ் ஜியோகாரகீஸ் ஆர்கிரோபோலோஸ். கொழும்பில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் ஷாயிபி மற்றும் பல உயர் அதிகாரிகளும் இவ் உரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.


**நாட்டில் மேலும் 43 கொவிட் மரணங்கள் நேற்று (04.10.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,102 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 786 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 521,218 ஆக அதிகரித்துள்ளது.**

## இந்தியா, இலங்கையின்...

பௌத்த உறவை மேம்படுத்துவதற்கு இந்திய பிரதமர் மோதி அவர்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராட்டு தெரிவித்தார். அது பிரதமர் மோதியின் முன்னுரிமையான பணியாக விளங்கியதாக ஷ்ரிங்லா நம்பிக்கை தெரிவித்தார். இந்திய - இலங்கை பிரதமர்களிடையே கடந்த ஆண்டு இடம்பெற்ற இணையவழி இருதரப்பு மாநாட்டின் இறுதியில் இரு நாட்டு மக்கள் இடையிலான ஆழமான உறவை பலப்படுத்தும் நோக்கில் இந்திய பிரதமரினால் பௌத்த உறவின் மேம்பாட்டிற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை அறிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, இந்தியாவின் குஷிநகர் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக பிரகடனப்படுத்தப்பட்ட உடன், இலங்கையிலிருந்து முதல் யாத்ரீக விமானம் வருகைதரும் என நம்புவதாக தெரிவித்தார். இந்திய பிரதமர் நரேந்திர மோதி கடந்த இருதரப்பு மாநாட்டின் போது இதற்கான வேண்டுகோளை முன்வைத்திருந்தார். சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பில் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளிலும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்மையினால் உறவை மீண்டும் நிறுவுவதன் முக்கியத்துவம் குறித்தும் ஷ்ரிங்லா வலியுறுத்தினார். கொவிட் தொற்று நிலைமைக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைத்தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 18 சதவீதமாவதுடன், இந்தியா இலங்கையின் முக்கிய சுற்றுலாத் தளமாகும். இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விராட் கோலி, கிறிஸ் கெய்லை முறியடித்து பாபர் அசாம் சாதனை




பாகிஸ்தான் கிரிக்கெட் கேப்டன் பாபர் அசாம் டி20 கிரிக்கெட்டில் 7,000 ரன்களை அதிவேகமாகக் கடந்த முதல் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார். ஞாயிறன்று நேஷனல் டி20 கோப்பை கிரிக்கெட்டில் இந்தச் சாதனையை நிகழ்த்தினார் பாபர் அசாம்.

ராவல்பிண்டியில் சதர்ன் பஞ்சாப் அணிக்கும் செண்ட்ரல் பஞ்சாப் அணிக்கும் இடையிலான போட்டியில் செண்ட்ரல் பஞ்சாப் 120 ரன் இலக்கை விரட்டிய போது 25 ரன்களைக் கடந்த பாபர் அசாம் 7,000 டி20 ரன்களை அதிவிரைவில் எடுத்த வீரர் என்ற மைல்கல்லை ஏற்படுத்தினார். கிறிஸ் கெய்ல் 192 இன்னிங்ஸ்களில் 7000 டி20 ரன்களையும் விராட் கோலி 212 இன்னிங்ஸ்களில் 7,000 டி20 ரன்களையும் எடுக்க, பாபர் அசாம் 187 போட்டிகளில் 7,000 ரன்கள் மைல்கல்லை கடந்து வரலாறு படைத்தார்.

இந்த 7,000 ரன்களில் பாபர் அசாம் சர்வதேச டி20 போட்டிகளில் 61 ஆட்டங்களில் 2,204 ரன்களை எடுத்திருந்தார். சராசரி 46.89. இதில் ஒரு சதம் 20 அரைசதங்களை பாபர் அசாம் எடுத்துள்ளார். இது தவிர தனியார் கிரிக்கெட்டில் 3058 ரன்களை எடுத்துள்ளார் பாபர் அசாம். பாகிஸ்தான் சூப்பர் லீக், கரீபியன் லீக், பங்களா தேஷ் லீக், இங்கிலாந்து வைட்டாலிட்டி பிளாஸ்ட் ஆகியவற்றில் 84 போட்டிகளில் 3058 ரன்களை எடுத்துள்ளார் பாபர்.

நேஷனல் டி20 கோப்பையில் இதுவரை 6 இன்னிங்ஸ்களில் 259 ரன்கள் எடுத்துள்ளார் பாபர். ஏற்கெனவே இந்தத் தொடரில் ஒரு செஞ்சுரி அடித்துள்ளார். அதேபோல் டி20 கிரிக்கெட்டில் அதிக சதம் எடுத்தவர்கள் வரிசையிலும் விராட் கோலியைக் கடந்தார் பாபர். விராட் கோலி 5 சதங்களை மட்டும் எடுக்க பாபர் அசாம் 6 வது சதத்தை கடந்த வாரம் எடுத்தார். அதிக சதம் எடுத்ததில் ஷேன் வோட்சன், ரோகித் சர்மா ஆகியோரையும் பாபர் அசாம் கடந்துவிட்டார்.

(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## பொதுமக்கள் சுகாதாரத் துறைக்கு...

ஏடீஸ் எனப்படும் நுளம்பின் மூலம்தான் டெங்கு வைரஸ்கள் கடத்தப்படுகின்றது. இம்முறை கொரோனா தாக்கம் காரணமாக டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் அதிக அளவில் எடுக்க முடியவில்லை. இருப்பினும் எமது பிராந்தியத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்து விடக்கூடாது என்பதற்காக ஒரு திட்டமிடல் கூட்டத்தை ஏற்படுத்தி அத்தனை சுகாதார வைத்திய அதிகாரிகளையும் சிரேஷ்ட பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களையும் களத்தடுப்பு பணியாளர்களையும் அழைத்து கடந்த ஆறு மாதங்களாக எடுக்கப்பட்ட பூச்சியியல் அறிக்கையை அவர்களுக்கு விளக்கி எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான அழுத்தம் திருத்தமான ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும், மழைக்காலம் தொடங்கிவிட்டால் ஒக்டோபர் மாதம் தொடக்கம் வடக்கு-கிழக்கில் டெங்கு நோய் அதிகூடியதாக அமைந்துவிடும். இலங்கையிலேயே இந்த காலப்பகுதியில் டெங்கு நோய் மிக அதிகமாக காணப்படும் மாவட்டமாக பல வருடங்களாக மட்டக்களப்பு காணப்படுகிறது. கல்முனை பிராந்தியத்தை பொறுத்த வரையிலும் டெங்கு நோய் இந்த காலப்பகுதியில் மோசமாக தாக்குவதுடன் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி தான் வருகின்றது. பொதுமக்களும் சுகாதாரத் துறைக்கு உதவுகின்ற பொழுது இந்த வருடத்தில் ஏற்படும் டெங்கு தாக்கத்தை நிச்சயமாக எமது பிராந்தியத்தில் கடந்த வருடத்தைப் போன்று கட்டுப்படுத்துவோம் என்று நம்பிக்கையுடன் கூறிக் கொள்வதுடன் வீட்டில் அயலில் பாடசாலைகளில் வேலைத்தளங்களில் காணப்படுகின்ற நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களை இல்லாது செய்வதும் கிணறுகளை வலை போட்டு மூடி வைப்பதும் அல்லது மீன் குஞ்சுகளை விடுவதும் பாவிக்கப்படாத மலசல கூடங்களில் நீர் காணப்படுகின்ற இடங்களை அடைத்து விடுவதும் இந்த காலப்பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக இரத்த பரிசோதனை செய்து கொண்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொள்வதும் இன்றியமையாதது. சுகாதாரத்துறையினர் ஆகிய நாம் உங்களை காப்பாற்ற தயாராக இருக்கின்றோம். டெங்கு நோயை கட்டுப்படுத்த நுளம்புகளை கட்டுப்படுத்த நீங்கள் தயாரா? "எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்" என்று தெரிவித்துள்ளார்.

(மாளிகைக்காடு நிருபர்)

## மின்பிடியாளர்களின்...

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு, அக்கராயன் உட்பட சுமார் 7 குளங்களிலும் பருவகால நீர்நிலைகளிலுமாக 12 இலட்சம் இறால் குஞ்சுகளும் 1,389,570 இலட்சம் மீன் குஞ்சுகளும் இடப்பட்டுள்ளன.

நக்டா நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக சுமார் 40 இலட்சம் இறால் குஞ்சுகள் மற்றும் சுமார் 58 இலட்சம் மீன் குஞ்சுகளை முல்லைத்தீவு மாவட்ட நன்னீர் நிலைகளிலும் 30 இலட்சம் இறால் குஞ்சுகளையும் 50 இலட்சம் மீன் குஞ்சுகளையும் கிளிநொச்சி மாவட்ட நன்னீர் நிலைகளில் இவ்வருடம் இடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய இறால் மற்றும் மீன் குஞ்சுகளை எதிர்வரும் வாரங்களில் தெரிவு செய்யப்பட்ட நீர்நிலைகளில் இடுவதற்கான நடவடிக்கைகளை நக்டா நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இதன்மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,000 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த சுமார் 700 குடும்பங்களும் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக், வட்ஸ் அப்...

இந்த நிலையில் நேற்று (04) இரவு 9.30 மணியளவில் இந்த மூன்று செயலிகளும் திடீரென முடங்கியதால், சமூக வலைதள பயன்பாட்டாளர்களும், இணையவாசிகளும் பெரும் தவிப்புக்குள்ளாகினர். இலங்கை மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் ஒரே நேரத்தில் இந்தச் செயலிழப்பு ஏற்பட்டது. மொபைலில் பயன்படுத்தப்படும் வட்ஸ் அப், இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக் மட்டுமன்றி கணினியில் இவை செயலிழந்தன.

## மரணச் சான்றிதழ் கொடுக்கலாம்...

ஜனாதிபதியின் ஐநா உரை மற்றும், ஐரோப்பிய ஒன்றிய குழுவினரின் சந்திப்பு போன்றன தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சிலரிடம் இரண்டு முகங்கள் இருக்கும். ஒருவருக்கு ஒரு முகமும், இன்னொருவருக்கு இன்னொரு முகத்தையும் காட்ட முடியும். ஆனால் இந்த ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் பல முகங்களை வைத்திருக்கிறார்கள். தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு விருப்பமான முகத்தைக் காட்டிக் கொள்கின்றார்கள். அந்தவகையிலே ஜனாதிபதி அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் சென்று உரையாற்றும் போது ஏதோ தான் தமிழ் மக்களுக்கு நல்லது செய்யத் தயாராக இருப்பதாகவும், புலம்பெயர் அமைப்புகள் என்னுடன் பேச வாருங்கள். இலங்கைக்கு வாருங்கள் என்றெல்லாம் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

உண்மையிலேயே மஹிந்த ராஜபக்சவின் கடந்த ஆட்சியிலே புலம்பெயர் பல அமைப்புகளுக்கும், புலம்பெயர் நாடுகளில் வாழும் பலருக்கும் தடையுத்தரவு விதித்தவர்கள் இவர்கள். 2015ல் ஏற்பட்ட நல்லாட்சியில் அந்தத் தடையுத்தரவுகள் தளர்த்தப்பட்டாலும், கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்பு மீண்டும் அவர்களுக்குத் தடையுத்தரவைப் போட்டுவிட்டு தற்போது இலங்கைக்கு வாருங்கள் என்னுடன் பேசுங்கள் என்பது ஒரு வேடிக்கையான விடயம்.

காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்கின்றேன் என்று சொல்லியிருக்கின்றார். காணாமல் போனவர்களுக்கு நீங்கள் மரணச் சான்றிதழ் கொடுக்கலாம். ஆனால், உங்களிடம் கையளிக்கப்பட்டவர்கள் எங்கே? தங்களது மனைவிமார், பெற்றோர்கள் முன்னிலையில் அவர்களினால் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், முன்னணிப் போராளிகள், முக்கிய விடுதலைப் போராட்ட இயக்கமான ஈரோஸின் தலைவராக இருந்த பாலகுமார் மற்றும் அவரது மகன் போன்றோரெல்லாம் உங்களிடம் கையளிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கும் நீங்கள் மரணச் சான்றிதழ் கொடுக்கப்போகின்றீர்கள் என்றால் நீங்கள் அவர்களைக் கொன்றுவிட்டீர்கள் என்பதுதான் உண்மை. எனவே நீங்கள் கொலைக் குற்றவாளிகள். நீங்கள் தண்டனை பெற வேண்டியவர்கள். நீங்கள் அப்பட்டமான கொலையைச் செய்து விட்டு அவர்களுக்கு மரணச்சான்றிதழ் கொடுக்கின்றீர்கள் என்பதை நீங்களே ஏற்றுக் கொள்கின்றீர்கள். என்ற வகையிலேயே இந்த மரணச் சான்றிதழ் விடயத்தை நாங்கள் பார்க்கின்றோம்.

அதற்கும் மேலாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு முயற்சிப்பதாகக் கூறுகின்றீர்கள். ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் உங்களுக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைகளை அடுத்த சித்திரையில் இருந்து நிறுத்துவதற்கு இருக்கின்றார்கள். அதற்கிடையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கேட்டிருக்கின்றார்கள். நாங்கள் ஐரோப்பிய ஒன்றிய குழுவிடம் கேட்டுள்ள விடயம் பயங்கரவாத் தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்வது அல்லது அதில் ஏதாவது திருத்தத்தைக் கொண்டு வருவதல்ல. முற்றுமுழுதாகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே தமிழீழ விடுதலை இயக்கத்தின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று தெரிவித்தார்.

# பனாமாவைத் தொடர்ந்து வெளியான பண்டோரா பேப்பர்ஸ்

உலக நாடுகளின் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் முறைகேடாக கோடிக்கணக்கான ரூபாவை வெளிநாடுகளில் முதலீடு செய்த ஆவணங்கள், 'பண்டோரா பேப்பர்ஸ்' என்ற பெயரில் வெளியானது. இது, உலகம் முழுதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், சொந்த நாட்டில் வரி ஏய்ப்பு செய்து வெளிநாடுகளில் முதலீடு செய்யும் தகவலின் ரகசிய ஆவணங்கள், 2016ல் வெளியாகி சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பனாமா நாட்டைச் சேர்ந்த சட்ட ஆலோசனை நிறுவனமான மொசாக் போன்செகா, ஒரு கோடிக்கும் அதிகமான ரகசிய ஆவணங்களை, 'பனாமா பேப்பர்ஸ்' என்ற பெயரில் 2016ல் வெளியிட்டது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் இந்த முறைகேடுகளை அம்பலப்படுத்தியதில் முக்கிய பங்கு வகித்தனர். பல தனி நபர்கள், நிறுவனங்களின் முறைகேடுகள் இதில் வெளியாகின. பாக்., முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட பிரபலங்களின் பெயர்கள் இதில் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில் அதேபோல் நேற்று முன்தினம் பண்டோரா பேப்பர்ஸ் என்ற பெயரில் ரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

பாகிஸ்தான் அமைச்சர்கள் கோடிக்கணக்கில் சொத்துக்களை குவித்துள்ளதாகவும், அறக்கட்டளை என்ற பெயரில் பல கோடி ரூபாய் ஊழல் செய்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஜோர்டான் மன்னர் அப்துல்லா, பிரிட்டன் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் மற்றும் அவரது மனைவி ஷெரி பிளேயர், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், செக் குடியரசு பிரதமர் ஆண்ட்ரேஸ் பாபிஸ், கென்யா ஜனாதிபதி உஹுரு உள்ளிட்டோர் பல கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடாக சொத்து குவித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சைப்ரஸ் நாட்டு அதிபர் நிக்கோஸ் அனஸ்தேசியேட்ஸ், உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ஈக்வடார் ஜனாதிபதி கில்லர்மோ லாசோ உட்பட பல நாடுகளின் அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள் செய்துள்ள முறைகேடுகள் குறித்த ஆவணங்களும் வெளியிடப்பட்டுள்ளன.இந்தியாவைச் சேர்ந்த தொழில் அதிபர்கள், மக்கள் பிரதிநிதிகள், விளையாட்டு பிரபலங்கள் உட்பட, 300க்கும் மேற்பட்டோரின் பெயர்களும் இதில் இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



# ஆப்கான் குண்டுவெடிப்பில் 12 பேர் பலி




ஆப்கானிஸ்தான் தலைநகரில் உள்ள மசூதியில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் குறைந்தது 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 32 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆப்கானிய உட்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் காரி சயீத் கோஸ்டி தெரிவித்துள்ளார். காபூலின் ஈட்கா மசூதியில் மக்களின் அதிக நடமாட்டம் இருந்தவேளையில் இந்த குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்றது. தலிபான்கள் இரண்டு தசாப்த கால மோதலில் தங்கள் வெற்றியை கொண்டாடுவதற்காக நகரத்திற்கு வெளியே முதல் பெரிய கூட்டத்தை நடத்தியபோது ஈட்கா மசூதியின் நுழைவாயிலுக்குவெளியே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

அங்கு தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித்தின் தாயார் நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக அறியமுடிகின்றது. இருப்பினும், ஒகஸ்ட் நடுப்பகுதியில் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதிலிருந்து, ஐ.எஸ்.ஐ.எஸ் தொடர்புடைய தீவிரவாதிகள் அவர்கள் மீதான தாக்குதல்களை அதிகரித்துள்ளனர். அத்துடன் பயங்கரவாத தாக்குதல்களும் அதிகரித்துள்ள நிலையில் இது இருபிரிவுகளுக்கும் இடையே இடம்பெறும் இந்த தாக்குதல்கள் ஒரு பெரிய போரின் அபாயத்தை தோற்றுவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

**மனிதனுக்குப் பகை வெளியுலகத்தில் இல்லை. பயம் என்னும் பெயரில் மனதுக்குள்ளேயே இருக்கிறது. – மகாகவி**

# மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு




மருத்துவத்துக்கான நோபல் பரிசு நேற்று (ஒக்.,04) அறிவிக்கப்பட்டது. இதில், அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் ஆகியோருக்கு பகிர்ந்து வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய 6 துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு உலகின் மிக உயரிய விருதாக கருதப்படும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அந்த வகையில் 2021ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் ஸ்வீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமில் நேற்று முதல் அறிவிக்கப்படுகிறது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நோர்வேயில் அறிவிக்கப்படும்.

முதல் நாளான நேற்று மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. நோபல் கமிட்டியின் தலைவர் நோபல் பரிசு பெறுபவர்களின் பெயர்களை அறிவித்தார். 2021ம் ஆண்டிற்கான மருத்துவ நோபல் பரிசானது அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் ஆகியோருக்கு பகிர்ந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெப்பம், உடல் வலியை தொடாமல் உணரும் சென்சார் கருவியை கண்டுபிடித்ததற்காக இவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நாவுக்கு வடகொரியா எச்சரிக்கை

வடகொரியா கடந்த ஒரே மாதத்தில் 4 ஏவுகணைகளை சோதித்தது. இதுகுறித்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் கடந்த 1ம் திகதி நடந்தது. கூட்டத்தில், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு தடைவிதிக்கும் கவுன்சிலின் தீர்மானங்களை முழுமையாக செயல்படுத்த வடகொரியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.



இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலுக்கு வடகொரியா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து வடகொரியா வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரியான ஜோ சோல் சூ தெரிவித்துள்ளதாவது, அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளால் இதேபோன்ற ஆயுத சோத னைகள் நடத்தப்படுகிறது. அதற்கு ஐ.நா எதுவும் தெரிவிப்பதில்லை. ஆனால் எங்களிடம் கவுன்சிலின் தீர்மானங்களை முழுமையாக செயல்படுத்தவேண்டும் என தெரிவிக்கிறது. இதிலிருந்தே, ஐ.நா பாதுகாப்பு கவுன்சின் இரட்டை வேடம் தெரிகிறது.

வடகொரியாவின் இறையாண்மையை ஆக்கிரமிக்க முயன்றால், எதிர்காலத்தில் அது என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சிந்தித்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் செயல்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

# சுவிஸில் நடைமுறைக்குவரும் புதிய கட்டுப்பாடுகள்



சுவிட்சர்லாந்தில் இம்மாதம் முதல் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத மக்களுக்கு இலவச கொரோனா பரிசோதனை கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தடுப்பூசி செலுத்தாத மக்கள் 50 சுவிஸ் பிராங்குகள் கட்டணம் செலுத்தித்தான் பரிசோதனை மேற்கொள்ள முடியும் எனவும், இந்த விதியானது, வரும் 10ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அதோடு , 31ஆம் திகதியிலிருந்து நாட்டில், கடிகாரம் 1 மணி நேரம் பின்னோக்கி நகர்த்தப்படுகிறது. அதாவது சூரியன், உதயமாவதும், அஸ்தமனமாவதும் 1 மணி நேரம் முன்பே கணக்கிடப்படவுள்ளது.

மேலும், பிரிட்டன் செல்லும் சுவிஸ் பயணிகளுக்காக புதிய கட்டுப்பாடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, சுவிட்சர்லாந்தை பிரிட்டன், பச்சை பட்டியலில் வைத்திருக்கிறது.

அதன்படி நேற்றிலிருந்து, சுவிட்சர்லாந்தின் வாழிட உரிமம் பெற்ற மக்கள், பிரிட்டனுக்கு பயணம் மேற்கொள்ள விதிமுறைகள் மாற்றப்படவுள்ளது.

எனவே, பிரிட்டனுக்கு பயணம் மேற்கொள்ளும், முன்பு மக்கள் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். பிரிட்டன் சென்ற பின்பு, இரண்டாவதாக கொரோனா பரிசோதனை மேற்கொள்ள கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.